Tamil | தமிழ்

| Carers, caring and respite care | கவனிப்பாளர்கள் மற்றும் கவனிப்பு மற்றும் இடையோய்வு சேவைகள் |
|---|---|
| Being a full-time carer can be rewarding, but also challenging. | முழுநேரக் கவனிப்பாளராக இருப்பது திருப்திகரமானதாக இருக்கலாம், ஆனால் இது சவால் விடுப்பதாகவும் இருக்கக்கூடும். |
| Victoria has a wealth of support services to help those that are carers and those being cared for. The term "carer" can refer to paid and unpaid professional and lay carers. | கவனிப்பாளர்களுக்கும், கவனிப்பைப் பெறுவோருக்கும் ஆதரவுதவி அளிக்கும் பல சேவைகள் விக்டோரிய மாநிலத்தில் உள்ளன. "கவனிப்பாளர்" என்ற பதம் ஊதியம் பெறும் மற்றும் ஊதியம் பெறாத தொழிலர்களையும், தொழில் சாராத கவனிப்பாளர்களையும் குறிக்கும். |
| Professional carers are people who are trained and paid to look after people, but many carers are family members looking after older parents, their child, or their partner. Or carers can be friends or neighbours. | தொழில் சார்ந்த கவனிப்பாளர்கள் பயிற்சி பெற்றவர்கள், மற்றும் இவர்களுக்கு ஊதியம் உண்டு. ஆனால், பல கவனிப்பாளர்கள் பெற்றோரையோ, பிள்ளையையோ, அல்லது வாழ்க்கைத் துணைவரையோ கவனித்துக் கொள்ளும் குடும்ப அங்கத்தவர்களாக இருப்பார்கள். அல்லது கவனிப்பாளர்கள் நண்பர்களாகவும், அயலவர்களாகவும் இருக்கலாம். |
| As well as family members, partners, friends and neighbours caring for someone, there are a number of different professional carers known as care workers. | குடும்பத்தவர்கள், வாழ்கைத் துணைவர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் கவனிப்பாளர்களாக இருப்பதைப் போல, 'கவனிப்புச் சேவகர்கள்' எனப்படும் தொழில் சார்ந்த பலவகைப்பட்ட கவனிப்பாளர்களும் இருக்கிறார்கள். |
| Paid carers include home care workers, personal care workers, and disability support workers. | இல்லக் கவனிப்புச் சேவகர்கள், தனிநபர் கவனிப்புச் சேவகர்கள், உடலியலாமை உதவிச் சேவகர்கள் ஆகியோர் ஊதியம் பெறும் சேவகர்களில் உள்ளடங்குவர். |



Carers, caring and respite care © Copyright State of Victoria 2017

All personal care workers in Victoria must have a Certificate Three in home and community care or related area such as disability or aged care, with the relevant personal care and first aid competencies.

விக்டோரியாவிலுள்ள அனைத்து தனிநபர் கவனிப்புச் சேவகர்களும் 'இல்ல மற்றும் சமூக கவனிப்'பில் அல்லது உடலியலாமைக் கவனிப்பு, முதியோர் இல்லக் கவனிப்பு போன்ற வகைகளில் ஒரு 'சான்றிதழ் 3' (Certificate Three) -ஐ வைத்திருக்க வேண்டும், மற்றும் முதலுதவி அளிக்கும் திறனும் இவர்களுக்கு இருக்க வேண்டும்.

Aged care workers, for example, provide care and support to older people in residential facilities, clinics, hospitals, and private homes.

முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள், மருத்துவமனைகள் மற்றும் தனியார் துறை இல்லங்கள் ஆகியவற்றில் முதியோர் கவனிப்புச் சேவசகர்கள் வயதானவர்களுக்குக் கவனிப்பு அளிப்பார்கள்.

They help with personal care, such as showering, dressing and eating, domestic duties, preparing meals and cleaning, and managing illness, such as helping a person with medicines.

குளித்தல், ஆடை அணிதல், சாப்பிடுதல், வீட்டு வேலைகள், சாப்பாடு ஆயத்தம் செய்தல், துப்புரவு செய்தல் மற்றும் மருந்துகளை உட்கொள்ள உதவுதல் போன்ற வேலைகளில் ஒருவருக்குத் தேவைப்படும் கவனிப்பு உதவிகளை இவர்கள் செய்வார்கள்.

What my job involves more is to look after residents' three basic needs. The first one is their physical needs. The second one is social need. And the third one is psychological emotional needs. We help the residents to be independent, but also be there if they need us to help them.

இல்லத்தில் தங்கியிருப்பவர்களுடைய மூன்று அடிப்படைத் தேவைகளைக் கவனித்துக் கொள்வதும் என்னுடைய வேலையில் அடங்கும். முதலாவது அவர்களுடைய உடல்ரீதியான தேவைகள். இரண்டாவது சமூகத் தேவைகள். மூன்றாவதாக வருவது அவர்களுடைய மனரீதியான மற்றும் உணர்வுரீதியான தேவைகள். இல்ல வாசிகள் சுதந்திரமாக இருக்க நாங்கள் உதவுகிறோம், ஆனால் எங்களுடைய உதவி அவர்களுக்குத் தேவைப்படும்போதும் நாங்கள் அவர்களுக்காக இருக்கிறோம்.

While many carers talk of the rewards of being a carer, it is important to consider how much is involved, especially as an unpaid carer looking after a loved one.

கவனிப்பாளராக இருப்பது திருப்தி அளித்தாலும், இந்தச் சேவையில் எவ்வளவு வேலைகள் அடங்கியுள்ளன என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அதிலும் ஊதியம் இல்லாமல்



Carers, caring and respite care © Copyright State of Victoria 2017

தமது அன்புக்குரிய ஒருவரைக் கவனித்துக்கொள்பவரது நிலையைக் குறிப்பாகக் கருத்தில் கொள்ளவேண்டும்.

There could be reduced income if you give up your job, emotional and physical stress, or feeling isolated.

உங்களுடைய வேலையை நீங்கள் விடும்போது உங்களது வருமானம் குறையலாம், மனரீதியான அழுத்தம் ஏற்படலாம், அல்லது தனித்துவிட்ட உணர்வு உங்களுக்கு ஏற்படலாம்.

That's where support comes in.

இந்த நிலையில்தான் உங்களுக்கு உதவி தேவை.

“There are times where it’s a bit challenging.  It's great with palliative care, they've got their social workers and so forth, which is a great help for me as well as dad's, and they do a wonderful, wonderful job.”

சூழ்நிலைகளைச் சமாளிக்க இயலாத நேரங்கள் உள்ளன. நோவுத் தணிப்புக் கவனிப்பு என்பது மிகவும் உதவிகரமானது - இதில் சமூக சேவகர்கள் போன்றவர்கள் இருப்பதால் எனக்கும் அப்பாவுக்கும் இது மிகவும் உதவியாக இருக்கிறது. அவர்களுடைய சேவை உண்மையிலேயே மிகவும் அபாரமானது.

The Australian government offers support to carers caring for someone with a disability or mental illness, with a medical condition, after an illness or accident, or an older person with care needs.

உடலியலாமை அல்லது மனநோய் உள்ளவர்கள், நோயாளிகள், விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்கள், வயதானவர்கள் போன்றவர்களுடைய கவனிப்பாளர்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆதரவுதவிகளை அளிக்கிறது.

Support is also available to carers of people with a terminal or life-limiting illness, including respite, personal support, financial support, information, education, counselling, networking opportunities.

இறுதிக்கால நோய் மற்றும் வாழ்நாளைக் குறைக்கும் நோய் உள்ளவர்களுடைய கவனிப்பாளர்களுக்கும் உதவி கிடைக்கிறது. மற்றும் இடையோய்வு, நிதியுதவி, தகவல் அளிப்பு, கல்வியறிவு, அறிவுரையாலோசனை மற்றும் சமுகத் தொடர்பு வாய்ப்புகள் ஆகியவற்றிலும் இவர்களுக்கு உதவி கிடைக்கிறது.

The carer payment provides financial support to people who cannot work insubstantial paid employment because they provide full-time daily care.

நாள் நெடுக முழு-நேரக் கவனிப்பாளார்களாக இருப்பதன் காரணமாக ஊதியம் ஈட்டும் வேலைகளைச் செய்ய இயலாதவர்களுக்குக் 'கவனிப்பாளர் கொடுப்பனவு' என்ற நிதியுதவி



Carers, caring and respite care © Copyright State of Victoria 2017

கிடைக்கும்.

Visit the Department of Human Services to find out more detailed information about carer payments.

கவனிப்பாளர் கொடுப்பனவுகளைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள Department of Human Services .இன் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் -

There is a range of support to assist carers in the vital role they undertake. For more information, visit: BETTERHEALTH.vic.gov.au/carers

கவனிப்பாளர்கள் ஆற்றிவரும் இன்றியமையாத பங்கில் அவர்களுக்கு உதவுவதற்காக பலவித ஆதரவுச் சேவைகள் இருக்கின்றனமேலதிகத் . தகவல்களுக்கு: BetterHealth.vic.gov.au/carers



Carers, caring and respite care © Copyright State of Victoria 2017